# 14 திருவிவிலியத்தில் தூய ஆவி

என் துணையாளரே தூய ஆவியே
தண்ணீரின்மீது அசைந்து ஆடும்
ஆளுகையின் தேவனே
ஆராதிப்பேன் என் ஆருயிரே - 2

என்றும் தங்கும் துணையாளரே
எல்லாம் கற்றுத்தரும் என்நேசரே - 2
அக்கினியாய் என்மேல் இறங்கி வந்து
அபிஷேகம் செய்து என்னை ஆட்கொள்ளுமே!



14.1 ஆயர் உறுதிப்பூசுதல் வழங்குதல்

உண்மை நம்பிக்கையில் நம்மை உறுதிப்படுத்தி முதிர்ச்சிபெற்ற கிறிஸ்தவனாக முழுமை பெற தூய ஆவி எம்மில் செயலாற்றும் விசேட அருளடையாளம் உறுதிப்பூசுதலாகும். திருமுழுக்கினால் நாம் பெற்ற நம்பிக்கையை வளரச்செய்வது உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளமே.

**மீட்பின் வரலாற்றில் உறுதிப் பூசுதல் (பழைய ஏற்பாட்டில் தூய ஆவி)**

✝ ஆவி

ஆண்டவர் மேகத்தில் இறங்கி வந்து அவரோடு பேசினார். அவரில் இருந்த ஆவியில் கொஞ்சம் எடுத்து எழுபது மூப்பருக்கும் அளித்தார்.

(எண்ணிக்கை 11 : 25)

✝ கடவுளின் ஆவி

மண்ணுலகு உருவமற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது.

(தொ.நூ 1 : 2)

✝ தூய ஆவி

உமது முன்னிலையிலிருந்து என்னைத் தள்ளி விடாதேயும். உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும்.

(தி. பா 51 : 11)

**கிறிஸ்துவின் வாழ்வில் தூய ஆவியானவர்.**

வானதூதர் அவரிடம் தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்.

(லூக்கா 1 : 35)

ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, ‘‘யோசேப்பே, தாவீதின் மகனே உம் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்’’

(மத்தேயு 1 : 20)

இறைவன் தூய ஆவியை அளவின்றி இயேசுவில் பொழிந்துள்ளார். அதனால் இயேசுவுக்குப் புதுமைகள் செய்யவும் மறையைப் போதிக்கவும் சக்தி கிடைத்தது.

இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே தண்ணீரை விட்டு வெளியேறினார். உடனே வானம் திறந்ததையும், கடவுளின் ஆவி, புறா இறங்குவது போலத் தம்மீது வருவதையும் அவர் கண்டார்.

(மத்தேயு 3 : 16 - 17)

தொடர்ந்து யோவான் சான்றாகக் கூறியது தூய ஆவி புறாவைப்போல வானிலிருந்து இறங்கி இவர் மீது இருந்ததைக் கண்டேன். இவர் யாரென்று எனக்குத் தெரியாதிருந்தது. ஆனால் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கும்படி என்னை அனுப்பியவர் தூய ஆவி இறங்கி யார் மீது இருப்பதைக் காண்பீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர் என்று என்னிடம் சொல்லியிருந்தார். நானும் கண்டேன். இவரே இறைமகன் எனச் சான்றும் கூறிவருகிறேன்.

(யோவான் 1 : 32 - 34)

கடவுளால் அனுப்பப் பெற்றவர் கடவுளின் வார்த்தைகளைப் பேசுகிறார். கடவுள் அவருக்குத் தம் ஆவிக்குரிய கொடைகளை அளவின்றிக் கொடுக்கிறார்.

(யோவான் 3 : 34)

## இயேசு திருத்தூதர்களுக்கு தூய ஆவியை வழங்குதல் (பாஸ்கா ஞாயிறு அன்று)

*அவர் அவர்கள்மேல் ஊதி தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.*

(யோவான் 20 : 22)

பாஸ்கா ஞாயிறு அன்று இயேசு திருத்தூதர்களுக்குத் தோன்றி தூய ஆவியால் அவர்களை தைரியப்படுத்தினார். இதுபோல் நாம் பெற்ற திருமுழுக்கினால் இயேசுவை நம்பவும் அவரைப் பறைசாற்றவும் எமது வாழ்விற்குத் தைரியம் கிடைக்கின்றது.

## பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியின் வருகை



14.2 திருத்தூதர்கள் மீது தூய ஆவியின் வருகை

திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்.

(திப 2 : 2 - 4)

### திருத்தூதர் பிறருக்கு தூய ஆவியை வழங்குதல்

திருமுழுக்கையும் உறுதிப்பூசுதலையும் வழங்குவதற்குத் திருத்தூதர் இரண்டு முறைகளைப் பின்பற்றினர் என கீழே தரப்பட்டுள்ள விவிலியப் பகுதிகள் உறுதிப்படுத்துகின்றன.

சமாரியர் கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொண்டனர் என்பதை எருசலேமிலுள்ள திருத்தூதர்கள் கேள்விப்பட்டு பேதுருவையும் யோவானையும் அவர்களிடம் அனுப்பி வந்தார்கள். அவர்கள் சென்று சமாரியர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுமாறு இறைவனிடம் வேண்டினார்கள். ஏனெனில் அதுவரை அவர்களுள் யாருக்கும் தூய ஆவி அருளப்படவில்லை. ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் அவர்கள் திருமுழுக்கு மட்டுமே பெற்றிருந்தார்கள். பின்பு பேதுருவும் யோவானும் தங்கள் கைகளை அவர்கள் மீது வைக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றார்கள்.

(திப 8 : 14 - 17)

இதைக்கேட்ட மக்கள் ஆண்டவராகிய இயேசுவின் பெயரில் திருமுழுக்குப் பெற்றனர். பவுல் அவர்கள் மீது கைகளை வைத்ததும் தூய ஆவி அவர்கள் மேல் இறங்கியது. அப்பொழுது அவர்கள் பரவசப்பேச்சுப் பேசினர். இறைவாக்கும் உரைத்தனர்.

(திப 19 : 5 - 6)

சாவுக்கு அழைத்துச் செல்லும் செயல்களில் இருந்து மனமாற்றம் கடவுள்மீது நம்பிக்கை, முழுக்குகள், கையமர்த்தல் பற்றிய படிப்பினை, இறந்தோரின் உயிர்ப்பு என்றும் நிலைக்கும் தீர்ப்பு ஆகிய தொடக்கநிலைப் படிப்பினைகளைக் கற்பித்து மீண்டும் அடித்தளம் இடத் தேவையில்லை

(எபி 6 : 2)

நீங்கள் தூய ஆவியைப் பெற்றுக் கொள்ள இருப்பதனால் தினமும் தூய ஆவியானவரிடம் செபிப்பதோடு எப்பொழுதும் தூய ஆவியின் உதவியை நாடுங்கள். உங்கள் வாழ்வில் தூய ஆவியை அனுபவியுங்கள். செபிப்பதன் மூலம் தூய ஆவியின் கொடைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். உறுதிப்பூசுதல் பெறுவதன் மூலம் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக மாற்றமடைவோம்.

**செயற்பாடு**

1. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட திருத்தூதர்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள் எவை ?
2. தூய ஆவியின் வரம்வேண்டி ஒரு செபம் எழுதுக.

**வாழ்க்கைக்கு**

தூய ஆவியானவரின் வரம் வேண்டி செபியுங்கள்.